**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 11 ஆம் திகதிய 3650 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) மற்றும் 3651 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.04(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் 11 அமுல்ப்படுத்தல் முகவர்கள் காணப்படுகின்றனர். தொழில் பயிற்சிக்கான தரம், பொருத்தம், அணுகல், அங்கீகாரம் மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதன் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை தேவையை பூர்த்தி செய்வதற்கு திறமையான திறன் கல்வி முறைமையை உருவாக்குவது நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 154,624 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1,061.2 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 28,708.23 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்டதுடன் ரூபா 13,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. ஐ.அ.டொலர் 761.2 மில்லியன் மிகுதி தொகை ஜேர்மனி அரசாங்கம், கொரியா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி, ஏனையவர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 செப்தெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2021 யூன் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் 2023 யூன் 30 வரை இரு தடவை காலநீடிப்பு செய்திருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 11 முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களுடன் இணங்குகின்றதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றை 11 அமுல்ப்படுத்தல் முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றை தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஏனைய நன்கொடையாளர்கள் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 100.21 மில்லியன் தொகை தேசிய இளைஞர் மன்றத்தின் ஒருங்கிணைந்த மொத்த செலவின கூற்றிற்கு ரூபா 68.48 மில்லியனாக கொண்டு வரப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ஏனைய நிதி நடவடிக்கைகளில் காட்டப்பட்ட ரூபா 116.32 மில்லியன் தொகை ரூபா 31.73 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 31.73 | காசு அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஏனைய தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட முழு வருமானத்தை தவறாகக் கருத்தில் கொள்ளாமல் இருப்பதே இந்த வேறுபாட்டிற்கு காரணமாகும். அதாவது வருமானப் பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்குறிப்பு பதிவுகள் மூலம் செய்யப்பட்ட சீராக்கங்களைக் கருத்தில் கொள்ளாமல் தொடர்புடைய பெறுமதி கணிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்தத் தொகை ரூபா 31.73 மில்லியன் ஆகும். | நிதி நடவடிக்கைகளை கணிப்பிடுவதற்கு அனைத்து வருமானத்தையும் கருத்தில் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய இளைஞர் பேரவையின் ஒருங்கிணைந்த மொத்த செலவின கூற்றில் காட்டப்பட்டுள்ள காசு மற்றும் காசிற்கு சமமான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | 18.40 | காசு அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முற்பண கணக்குகளில் தவறுதலாக உள்ளடக்கப்பட்ட ரூபா 18 மில்லியன் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதமையே இந்த வித்தியாசத்திற்குக் காரணமாகும். | ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றின் புள்ளிவிபரங்களுக்கு வருவதில் தொடர்புடைய அனைத்து உருப்படிகளையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றில் இலங்கை ஜேர்மன் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தில் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 508 மில்லியன் மீண்டெழும் செலவினங்களின் உப கூட்டுமொத்தமானது ஆரம்ப | 5.23 | ஆண்டு ஆரம்ப அட்டுறு செலவினங்கள் ரூபா 32.169 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டு இறுதியில் அட்டுறு செலவினம் ரூபா 27.69 மில்லியனாக இருந்தது. இந்த இரண்டு அட்டுறு செலவினங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு ரூபா 4.47 | செலவினங்கள் காசு அடிப்படையில் சரியாக பிரதிபலிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் இறுதி அட்டுறுக்களை சீராக்கிய பின்னர் 11 மீண்டெழும் செலவின உருப்படிகளின் ரூபா 5.23 மில்லியன் கூட்டுமொத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | மில்லியன் காசு அடிப்படையில் கணக்குகளில் சீர்செய்யப்பட வேண்டும். | |
| (ஈ) | ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றில் சுயநிதி பெறுமதி ரூபா 18.87 மில்லியன் காட்டப்பட்ட போதிலும் அதே பெறுமதி தொடர்புடைய குறிப்பு இல. 04 இன் கீழ் ரூபா 36.47 மில்லியனாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 17.6 | ரூபா 18.87 மில்லியன் சரியானதாகும். இந்த பெறுமதி நிதிக்கூற்றில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தொடர்புடைய குறிப்பு இல. 04 இன் பெறுமதி ரூபா 36.47 மில்லியனாக இருந்தது. | குறிப்புக்களை சரியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2023 யூன் 20 வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - | 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2023 யூன் 23 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

9 பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டிகளின் கீழ் வழங்கப்பட்ட 51 இலக்குகளில், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 48 இலக்குகள் அடைந்துகொள்ளப்பட்டுள்ளன. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிக தேவை கொண்ட கைத்தொழில் துறைகளில் வேலைகளுக்குத் தேவையான திறன் அபிவிருத்திக்கான ஆதரவை வழங்கும் நோக்கத்துடன் வேலைவாய்ப்பு இணைப்பு பயிற்சி கொள்வனவு மாதிரி (ELTP) நிகழ்ச்சித்திட்டம் 2015 இல் DLI 05 இன் கீழ் தொடங்கப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 அளவில் 8,000 மாணவர்களை சேர்க்கும் இலக்கை அடைந்ததுடன் இதற்காக ரூபா 343.51 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது. | | |
| | 104 உடன்படிக்கைகளின் கீழ் கற்கைநெறிகளிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட 8,426 மாணவர்களில் 5,863 மாணவர்கள் கற்கைநெறிகளை நிறைவு செய்ததுடன் | இலக்கு அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. DLI 05 தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய | இடையில் விலகுவதை குறைப்பதற்கான முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கற்கைநெறிகளை பூர்த்தி செய்வதிலிருந்து 65 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 3,814 மாணவர்கள் மாத்திரமே NVQ சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். மேலும், மாணவர்களுக்கு கற்கைநெறிகள் இலவசமாக இருந்த போதிலும் 30 சதவீத மாணவர்கள் இடையில் விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, பல்வேறு நிலைகளில் கற்கைநெறிகளில் இருந்து விலகிய மாணவர்களின் சார்பாக வெவ்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கிரயம், திறன் தொழிலாளர்களை வழங்குவதற்கு நலன்களை வழங்காது. | மொத்தத் தொகை இதுவரை பெறப்பட்டுள்ளது. 5,863 பேர் கற்கைநெறிகளை பூர்த்தி செய்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது, அவர்களில் 3,814 பேர் NVQ சான்றிதழ்களை பெற்றுள்ளனர். இது கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களில் ஏறத்தாழ 65% ஆக உள்ளதுடன் மீதமுள்ள 35% பேருக்கு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | DLI 6 (II) ஐ அடைந்துகொள்வதற்கு கைத்தொழில் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் 4,000 ஊழியர்களுக்கு பயிற்சி தேவைப்பட்டது. எனினும், பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 1,581 ஊழியர்களுக்கு மாத்திரமே ரூபா 9.52 மில்லியனை செலவிடுவதன் மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடாத்தப்பட்டது. | 2022 ஆம் ஆண்டிற்கான SSDP இற்கான பாதீட்டு ஒதுக்கீட்டில் தாமதம் ஏற்பட்டதால், திட்டமிடப்பட்ட தொழில்துறை தொழிலாளர் பயிற்சியின் ஆரம்பம் 2022 திசெம்பரில் தொடங்கியது. நாட்டின் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, தொழில்துறைகள் முதலீடு செய்யத் தயங்குகின்றன அல்லது தொழிலாளர்களின் பயிற்சியை முன்னுரிமையாகக் கருதவில்லை. | கடனை தாமதமின்றி வழங்குவதற்கு DLI ஐ அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | DLI 9 (ii) இன் கீழ் நடுத்தர கால அமுலப்படுத்தல் திட்டம் மற்றும் செலவினக் கட்டமைப்புடன் 2021 முதல் 2030 வரையிலான புதிய துறை மூலோபாயத்தை உருவாக்குதல் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 இல் SSDP இற்கான பாதீட்டு ஒதுக்கீடு தாமதமானதால், தேவையான ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்களை அவர்களின் செலவில் வழங்குவதற்கு ADB இணங்கியது. இது தாமதமான தொடக்கத்தை ஏற்படுத்தியதுடன் தற்போது ADB ஆலோசகர் பல பங்குதாரர்களை ஈடுபடுத்துதல் அமர்வுகளைச் மேற்கொண்டு இறுதி மூலோபாய அறிக்கையை அமுல்படுத்தல் திட்டம் மற்றும் நிதிக் கட்டமைப்புடன் பூர்த்தி செய்துள்ளது. இது DLI தேவைப்பாட்டை பூர்த்தி செய்கிறதுடன் பொருந்தக்கூடிய நிதி பணவளிப்பு மேற்கொள்ளப்படும். | தாமதமின்றி கடனை வழங்குவதற்கு DLI ஐ அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) DLI 02 இன் கீழ் 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 305 VT நிலையங்களில் பயிற்சி நிலையங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு தர முகாமைத்துவ முறைமை (QMS/QIS) நிறுவப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 168.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அறிக்கைகளின் பிரகாரம் பொது மற்றும் தனியார் துறைகளில் 223 பயிற்சி நிலையங்கள் தரச் சான்றிதழைப் பெற்றிருந்த போதிலும் அந்த சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 31 அளவில் முடிவடைந்திருந்தது. மேலும், 29 நிறுவனங்கள் மாத்திரமே பெறப்பட்ட சான்றிதழ்களை புதுப்பித்திருந்ததுடன் புதுப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 31 அளவில் காலாவதியாகியிருந்தது. எனவே, 2023 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி வரையிலும் பயிற்சி நிலையங்கள் தரத்தை தொடர்ந்து பேணியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | தர முகாமைத்துவ முறைமையுடன் தொடர்புடைய DLI 02 ஆனது 2020 ஆம் ஆண்டளவில் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்கு 300 TVEC பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களில் தர மேம்பாட்டு முறைமைகளை நிறுவுவதாகும். 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில், QIS முறைமை அதன் இலக்குகளை அடைந்திருந்தது. எனினும், QMS முறைமையை நிறுவுவது TVEC ஆல் செய்யப்படுகிறதுடன் 223 பயிற்சி நிலையங்கள் QMS முறைமையை நிறுவியிருந்தன. இவற்றின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாகும், அதற்காக நிறுவனம் TVEC இற்கு கோரிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டும். பின்னர் அது தொடர்பான மேலதிக பணிகளை TVEC நிறுவனம் மேற்கொள்ளும். | தரமான சேவையை வழங்குவதற்கு பயிற்சி நிலையங்களின் தரத்தை தொடர்ந்து பேணுவதை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(உ) உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

**(i) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிர்மாணப் பணிகள்**

| | | |
|---|---|---|
| மொனராகலை, தம்புள்ளை மற்றும் லவ்லேன் பயிற்சி நிலையங்களின் நிர்மாணப் பணிகள் முறையே 70 சதவீதமும் 65 சதவீதமும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஒப்பந்ததாரர்களால் கைவிடப்பட்டிருந்ததுடன் அந்த நேரத்தில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ரூபா 146.68 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், சபை ஒப்பந்தங்களை மீண்டும் வழங்கியிருக்காததுடன் மீதமுள்ள பணிகளை 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | பயிற்சி பெறுபவர்களுக்கு வசதியளிப்பதற்கு இந்த நிலையங்களின் உத்தேச நிர்மாணம் எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்ய முடியாததால், 2023 இன் செயல்நடவடிக்கைத் திட்டம் மூலம் ஒவ்வொன்றும் ரூபா 5 மில்லியனான ரூபா 15 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 4 வகுப்பறைகளின் பணிகளை பூர்த்தி செய்வதற்கும் இந்தக் கட்டிடங்கள் ஒவ்வொன்றிற்கும் மின்சாரம் மற்றும் தண்ணீரை வழங்குவதற்கும் கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு | நிர்மாணங்களின் மிகுதிப் பணிகளை பூர்த்திசெய்வதற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இப்பணியை இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | |
| **(ii) கிளிநொச்சியில் உள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் விடுதிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள்** | | |
| 2017 செப்தெம்பர் 12 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 400 மாணவர்களுக்கான குடியிருப்பு வசதிகளை வழங்குவதற்காக 3 மாடிகளைக் கொண்ட புதிய விடுதிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 253.8 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2020 மே 20 இல் ரூபா 185.61 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) ஒப்பந்த காலம் 03 முறை 2023 யூன் 30 வரை நீட்டிக்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரமே அடைந்துகொள்ளப்பட்டது. | முன்மொழியப்பட்ட விடுதி கட்டிடத்தின் நிர்மாணம் 2021 ஆகஸ்ட் 27 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. ஆனால் 2020 ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுநோய் காரணமாக பணியிடத்திற்கு அருகாமையில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் இருந்ததால், நிர்மாணத்தின் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாக இருந்தது. ஒப்பந்ததாரரின் முந்தைய விலைப்பட்டியல்களை தாமதமாக கொடுப்பனவு செய்ததால் இது மிகவும் சிக்கலானதாக இருந்ததுடன், மின்வெட்டு மற்றும் சந்தையில் கட்டிடப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு காரணமாக ஒப்பந்ததாரர் 2022-04-26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்மாணத்தை நிறுத்தினார். ஒப்பந்ததாரரிடம் நிலுவை கொடுப்பனவுகளை செலுத்திய பின்னர் பணியை மீண்டும் தொடங்குமாறு அவரிடம் | நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கேட்டுக் கொள்ளப்பட்ட போதிலும் அந்த நேரத்தில் பொருட்களின் விலைகள் அதிகமாக இருந்ததால் பணியைத் தொடர மறுத்துவிட்டார். எனவே, தற்போதைய விலைகளைப் பயன்படுத்தி மாத்திரமே தரை தளத்தில் பணியை பூர்த்தி செய்வதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஆலோசகரால் சரிபார்க்கப்பட்டு, திருத்தங்களுடன் எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மூன்றாவது நீடிப்பு நிர்மாணத்தை மீண்டும் தொடங்கி ஒப்பந்ததாரருடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை கைச்சாத்திட்டு 2023.06.30 இற்குள் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டது. | |
| (ஆ) | உடன்படிக்கையின் ஒப்பந்தத் தரவு 14.5 இன் பிரகாரம் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் குறைந்தபட்ச பெறுமதி ரூபா 6.5 மில்லியனாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 18.73 மில்லியன் பெறுமதியான 04 இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததை விட குறைவான பெறுமதிகளாகும். | உடன்படிக்கையின் ஒப்பந்தத் தரவு 14.5 இன் பிரகாரம் இடைக்கால கொடுப்பனவுகளின் குறைந்தபட்ச பெறுமதி ரூபா 6.5 மில்லியனாக இருந்த போதிலும், தொடர்புடைய காலப்பகுதியில் தொழிலாளர்கள் இல்லாததால், நிர்மாணத்தின் செயற்திறன் மிகவும் குறைவாக இருந்தது. குறிப்பிட்ட காலத்தில் செய்யப்பட வேண்டிய நிர்மாணத்தின் பெறுமதி அடைந்துகொள்ள முடியாததால் குறித்த நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்மாணத்தின் தொகையை அடைந்துகொள்ள முடியவில்லை. நிதி முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு செயற்திட்டத்தின் தடையின்றிய காசுப்பாய்ச்சலை உறுதிப்படுத்துவதற்காக பெறப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளையும் | ஒப்பந்தத்தின் விதிமுறைகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (இ) | தொடர்ச்சியாக, பணியில் ஈடுபடுத்தப்பட்ட ஆலோசனை நிறுவனத்தால் BOQ ஐ தயாரிக்காமல் தரைத் தளத்திற்கு ஒப்பந்ததாரரால் தயாரிக்கப்பட்ட ரூபா 120.14 மில்லியன் திருத்தப்பட்ட BOQ ஐ அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டக் காலத்தின் இறுதியளவில் கட்டிடத்தின் தரை தளத்தை மாத்திரம் பூர்த்தி செய்வதற்கு ரூபா 60 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 2022 இல் மேலதிகமாக அதே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், நிகழ்ச்சித்திட்ட காலத்தின் இறுதியில் ஏனைய தளங்களின் மீதமுள்ள பணிகளை பூர்த்தி செய்வதில் நிச்சயமற்ற நிலை காணப்படுகிறது. | திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவு, ஒப்பந்ததாரர் மற்றும் ஆலோசகர் இணைந்து எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் விடுதி கட்டிட செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதிக்கு மேலதிகமாக கட்டிடத்தின் எஞ்சிய பணிக்காக ஒப்பந்ததாரரால் தயாரிக்கப்பட்ட ரூபா 120,145,430 பெறுமதியான திருத்தப்பட்ட அளவுத் தாள், ஆலோசகர் வழங்கிய அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பரிந்துரை பெறப்பட்டுள்ளது. விடுதியின் எஞ்சிய தளங்களின் நிர்மாணப் பணிகள் பின்னர் தொடங்கப்படும் போது, முடிக்கப்பட்ட மாடியில் இன்றைய நாள் நடவடிக்கைகளுக்கு இடையூறு இல்லாமல் வெளிப்புற ஏற்றுதல் முறையைப் பயன்படுத்தி நிர்மாணத்திற்கான நிர்மாணப் பொருட்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | திருத்தப்பட்ட BOQ பணிக்கமர்த்தப்பட்ட உரிய ஆலோசகர் நிறுவனத்தால் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்ததாரரால் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட BOQ இல் குறிப்பிடப்பட்டுள்ள சூப்பர் கட்டமைப்பு உருப்படிகளில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனையின் பிரகாரம் செய்யப்பட்ட மொத்த வேலையின் அளவு மற்றும் திருத்தப்பட்ட தொகை ஆகியவை அசல் BOQ இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 10.68 மில்லியன பெறுமதியான 10 உருப்படிகளின் பெறுமதியை விட அதிகமாக உள்ளது.. மேலும், 3G-01 மற்றும் 3G-03 உருப்படிகள் தொடர்பாக செய்யப்பட்ட அதே அளவு வேலைகள் புதிய விலைவிகிதத்தின் கீழ் முறையே ரூபா 2.76 மில்லியன் மற்றும் ரூபா 3.31 | வேறுபாடுகளின் பெறுமதி ஒப்பந்த பெறுமதியின் 10% ஐ விஞ்சியிருந்தால், அது அங்கீகாரத்திற்காக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், இதுவரை, அளவு மாற்றம் மற்றும் மேலதிக பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ஒப்பந்தத் தொகையில் 10% ஐ விஞ்சியிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>கட்டிடத்தின் கூரைக்குத் தேவையான இரும்புக் கூறுக்கான அளவிடை விலைப்பட்டியல்களில் 3G - 1 | ஒப்பந்ததாரரின் பணிகளை மேற்பார்வையிடுவதற்கும், 3G-01 மற்றும் 3G-03 இற்கான அசல் BOQ இல் குறிப்பிடப்பட்டுள்ள விலைவிகிதத்தின் அடிப்படையில் கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாக கோரப்பட்மை அவதானிக்கப்பட்டடது. | மற்றும் 3G - 3 காணப்படுகின்றதுடன் உருப்படிகள் IPC 13 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போது இந்த இரும்பு கூரை கட்டமைப்பிற்கு பயன்படுத்தப்பட்டது. ஆனால், மேற்கூரை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, பூர்த்தி செய்யப்படாத பொருட்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த இரண்டு உருப்படிகளுக்கும் புதிய விலைவிகிதங்களுடன் கூடிய திருத்தப்பட்ட அளவிடை விலைப்பட்டியல்களை ஒப்பந்ததாரர் சமர்ப்பித்துள்ளார். குறிப்பிட்டுள்ள அந்த உருப்படிகளுக்கு கொடுப்பனவு செய்யும் போது, செயற்திட்டங்களின் அசல் அளவுத் தாளில் குறிப்பிடப்பட்டுள்ள விலைவிகிதங்கள் இதற்கு பயன்படுத்தப்படும் என்பதால், பொது நிதி இழப்பு ஏற்படாது. | |
| (உ) | இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் இல.13 இன் கணக்காய்வின் போது, ஆலோசனை நிறுவனம் தேவைக்கேற்ப விடுதியின் அடிப்படைத் திட்டத்தைத் தயாரித்திருக்காததால் அங்கீகாரம் பெறப்படாமல் BOQ இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கு அப்பால் 10 சதவீதம் முதல் 780 சதவீதம் வரையிலான வீச்சில் 36 பொருட்களுக்கு ரூபா 5.56 மில்லியன் மேலதிக கிரயம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | IPC 13 இல் உள்ள உருப்படிகளின் அளவுகளை அசல் அளவுத் தாளில் உள்ள அளவுகளுடன் ஒப்பிடும் போது, அதிகரிப்பு மற்றும் குறைவுகள் ஏற்பட்டிருந்தமையை ஒப்புக்கொள்கிறேன். எனினும், வேலையின் பெறுமதி மொத்த ஒப்பந்தத்தில் 10% ஐ விட அதிகமாக இருந்தால், கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முன்னர் CAO ஐப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்ததாரரின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இப்பயிற்சி நிலையத்தில் தற்போது 6 பிரிவுகளின் கீழ் 12 NVQ 4 மற்றும் 5 கற்கைநெறிகள் மாத்திரமே நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் 2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 304 மாணவர்களின் | 2017 ஆம் ஆண்டில், இந்த நிறுவனத்தில் 22 முழுநேர கற்கைநெறிகள் நடாத்தப்பட்டன. ஒரு ஆண்டின் போது 300-400 மாணவர்கள் சேரக்கப்பட்டுள்ளதாலும் நீண்ட காலம் எடுக்கும் (ஓராண்டு | மாணவர்களை சேர்த்துக்கொள்ளுதல் படிப்படியாக குறைவடைவதில் கவனம் செலுத்தப்பட்டு, இந்த சூழ்நிலையை தவிர்ப்பதற்கு உரிய கல்வி |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு வரை படிப்படியாக 211 ஆகக் குறைவடைந்துள்ளது. மேலும், விடுதியில் காணப்பட்டது. 144 மாணவர்களின் வசதித் தேவைகள் தற்போது 3 விடுதிகளால் பூர்த்தி செய்யப்படுகின்றன, மேலும் குடியிருப்பு வசதிகளின் அதிகபட்சத் தேவைகளை மதிப்பீடு செய்து ஒரு திட்டத்தைத் தயாரித்திருந்தால், ஏற்பட்ட கிரயத்தில் முழு நிர்மாணப் பணிகளையும் செயற்திட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்திருக்க முடியும். | அல்லது அதற்கு மேற்பட்ட) கற்கைநெறிகளைக் கருத்தில் கொண்டதாலும் SLGTI இல் ஒரு நேரத்தில் சராசரியாக 600 ஆண்/பெண் மாணவர்கள் இருப்பார்கள் என கருதலாம். அதன் பிரகாரம் சராசரியாக 400 ஆண் மாணவர்கள் படிக்கும் வகையில் இந்தக் கட்டிடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ADB இன் வேண்டுகோளுக்கு இணங்க மொறட்டுவ பல்கலைக்கழகம் தயாரித்த IEE அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்த வேண்டும். |
| **(iii)** | **தொழில் பயிற்சி அதிகாரசபையின் நிர்மாணப் பணிகள்** | | |
| (அ) | காரைநகர் ஹோட்டல் பாடசாலையில் தலைமை சமையலாளர் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 10.47 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் பயிற்றுவிப்பாளர் இல்லாத காரணத்தினால் 5 வருட விளைவற்ற காலப்பகுதியின் பின்னர் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை முறையே 35 மற்றும் 20 ஆக இருந்தது. | மேற்படி உபகரணங்களை அந்த நிலையத்தில் தொடர்ந்து இயக்காததால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு முதல் ஆலோசகர் ஒருவரை நியமித்து அந்த நிலையத்தில் கற்கைநெறியை தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு தற்போது கற்கைநெறி குறைந்த மட்டத்தில் இயங்கி வருகிறது. | மேலதிக காலதாமதமின்றி உபகரணங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 4.47 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் 2016 ஆம் ஆண்டில் பொத்துவிலில் பதலைமைச் சமையலாளர் கற்கைநெறிக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத காரணத்தினால் குறித்த பாடநெறி கணக்காய்வு திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த உபகரணங்கள் விளைவற்ற நிலையில் இருந்ததுடன் உத்தரவாதக் காலப்பகுதியும் காலாவதியாகியிருந்தது. | பிரதேசத்திலுள்ள இளைஞர்களின் திறன்களை வளர்ப்பதற்காக சமையல் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதெனவும், கற்கைநெறியை கற்பிப்பதற்கு தகுதியான பயிற்றுவிப்பாளர் ஒருவரை நியமிக்க முடியாதிருந்ததெனவும் பொத்துவில் ஹோட்டல் பாடசாலை ஒப்புக்கொண்டுள்ளது. சமையல் NVQ மட்டம் 4 கற்கைநெறியை | உபகரணங்களை வழங்குவதற்கு முன்னர் பயிற்சி நிறுவனங்களின் வசதியை செயற்திட்ட முகாமைத்துவம் கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடாத்துவதற்கு குறைந்த பட்சம் தலைமை சமையலாளர் NVQ மட்டம் 4 தகைமையும் ஒரு வருட அனுபவமும் கொண்ட தகைமையுடைய தமிழ் ஊடக பயிற்றுவிப்பாளர் ஒருவரை நியமிக்க இயலாதமையே இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாகும். மேலும், எதிர்காலத்தில், 2023.03.20 ஆம் திகதிய விரீஏ/ரீஆர்டி/ஏடி/ரீஜ/பயிற்சி திட்டம் 2023 என்ற இலக்கத்தையுடைய கடிதம் மூலம் அனைத்து மாவட்டங்களுக்கும் வாரநாட்களில் பகுதி நேர கற்கைநெறியாக தகைமையுடைய வெளியக ஆலோசனையாளர் ஒருவரை பணிக்கமர்த்தி பகுதிநேர கற்கைநெறியை தொடங்குவதற்கு தேவையான வேலைகளைச் செய்தல். | |
| (இ) | மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்காக அஹுங்கமவில் ஏற்கனவே உள்ள ஹோட்டல் பாடசாலையை ஹோட்டலாக புனரமைப்பதற்கான நிகழ்ச்சித்த்திட்டத்தின் மூலம் ரூபா 162.18 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. எனினும், 2023 மார்ச் 15 ஆம் வரையிலும் அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அஹுங்கம ஹோட்டல் பாடசாலையின் பயிலுனர்களின் பயிற்சியானது கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை, தற்போது எமது அமைப்பு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்து இந்த ஹோட்டலை மேலும் பயிற்சி ஹோட்டல் பாடசாலையாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மாத்திரமே நிதிகளைப் பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | அம்பாறை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதற்காக தொழில் பயிற்சி அதிகாரசபையின் நோக்கங்களுக்கு முரணக ரூபா 91.03 மில்லியனிற்கு நிர்மாணிக்கப்பட்ட 22 ஹோட்டல் அறைகள் மற்றும் ரூபா 6.10 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் 2017 ஆம் ஆண்டு | இந்த அறைகளின் பராமரிப்பு மற்றும் இயக்கத்தில் உள்ள முகாமைத்துவ குறைபாடு காரணமாக, இந்த ஹோட்டல் அறைகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை . இந்த ஹோட்டல் அறைகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு தனியார் | மேலதிக தாமதமின்றி ஹோட்டல் அறைகளை பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் விளைவற்றிருந்தன. | துறையுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | |
| (உ) | குச்சிவெளி ஹோட்டல் பாடசாலையின் 52 பயிலுநர்கள் தங்குவதற்கு வசதியாக 12 முழு வசதிகள் கொண்ட அறைகள் கொண்ட இரண்டு மாடி விடுதிக் கட்டிடம் 2017 இல் ரூபா 140.21 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், விடுதியானது நிரந்தரமான நீர் விநியோகத்தை கட்டிடத்திற்கு பெற முடியாதிருந்ததால் 2023 மார்ச் 15 வரை விளைவற்ற நிலையில் இருந்தது. | குச்சவெளி ஹோட்டல் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட காலப்பகுதியில் நிரந்தர நீர் விநியோகம் இல்லாதமை இனங்காணப்பட்டு, நிரந்தர நீர் விநியோகத்தை நீர் வழங்கல் மற்றும் நீர் போக்குவரத்து சபை வழங்கும் வரை பௌசர் மூலம் அந்த நிலையத்திற்கு தேவையான நீர் வசதிகள் வழங்கப்படும் என்ற உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையின் இறுதியில் அப்பிரதேசங்களில் பயிலுனர் பயிற்சிக்கான கோரிக்கையை கருத்திற்கொண்டு இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தகுதியான பயிற்றுவிப்பாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதிலும், தக்கவைத்துக்கொள்வதிலும் உள்ள சிரமம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது. இந்த வளங்களை மிகவும் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் ஏற்கனவே தனியார் துறையுடன் இணைந்து செயல்படுகிறது. | நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் நிதியை பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும். |

**(iv) பட்டன்கல பல்கலைக்கழக கல்லூரி**

| | | | |
|---|---|---|---|
| (அ) | விருந்தோம்பல் முகாமைத்துவ ஆய்வுகூடத்தில் குளியலறை நிர்மாணிப்பதற்காக 2015 ஆகஸ்ட் 24 இல் ரூபா 464,400 பெறுமதியான குளியலறை உபகரணங்கள் மற்றும் பட்டன்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் கணனி ஆய்வுகூடத்தில் காணப்பட்ட ரூபா 772,133 பெறுமதியான கணனி | விருந்தோம்பல் முகாமைத்துவ ஆய்வுகூடத்தின விரிவாக்கத்திற்காக 2023 ஆம் ஆண்டு பாதீட்டில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் பெறுகை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. | 2015 ஆம் ஆண்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதால், பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் 2023 மே வரையிலும் விளைவற்றிருந்தது. | | |
| (ஆ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட நிர்மாணத் தகவலின் பிரகாரம் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 07 அரசாங்க பல்கலைக்கழக கல்லூரிகளை நிறுவுவதற்காக ரூபா 954.1 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 05 பல்கலைக்கழக கல்லூரிகளை ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட போதிலும், கட்டுபெத்த மற்றும் பட்டன்கல பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பான எந்தவொரு சட்ட ஆவணமும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 03 பல்கலைக்கழக கல்லூரிகள் பொது மற்றும் தனியார் பங்குடமையின் கீழ் நிறுவப்பட்டன. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் இந்தப் பல்கலைக்கழகங்கள் செயற்பாட்டு நிலையில் இருக்கவில்லை. | அமைச்சரவைப் பத்திர இல. 13/0042/539/001, 2008 இன் 31 ஆம் இலக்க தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்காக 25 பல்கலைக்கழக கல்லூரிகளை நிர்மாணிப்பதற்கு 2013 பெப்ரவரி 01 இல் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.<br><br>அதன் பிரகாரம் அமைச்சுக்கு சொந்தமான காணிகளில் 5 தொழிற்கல்வி தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பின்னர் பட்டன்கல மற்றும் கட்டுபெத்த தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களின் நிர்மாணப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பூர்த்தி செய்தலின் பின்னர் படன்கல மாத்திரம் பல்கலைக்கழகக் கல்லூரியாகப் பயன்படுத்தப்பட்டது. கட்டுபெத்தவில் நிர்மாணிக்கப்பட்ட ஏனைய கட்டிடங்கள் CGTTI மாணவர்களுக்கான கற்கைநெறிகளை நடாத்துவதற்கு CGTTI இன் ஒரு பகுதியாக பயன்படுத்தத் தொடங்கியது.<br><br>அரச மற்றும் தனியார் பங்குடமையின் கீழ் 03 தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கும் திட்டங்களில் ஒன்று ஜயவர்தனபுர வைத்தியசாலையில் நிறுவப்பட்டு அது இன்னமும் செயற்படுகின்றது. ஒன்று | எஞ்சியுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியின் சட்டமூலங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மட்டக்களப்பிலும் மற்றையது இரத்மலானை ACTA நிறுவனத்திலும் முன்மொழியப்பட்ட போதிலும், அதற்கான பணம் முதலீடு செய்யப்படவில்லை. | |
| (ஊ) தொழில் பயிற்சி நிறுவனங்களின் திறன்களை வழங்குவதற்கும், தொழில்துறைகள் கோரும் திறன்களுக்கும் இடையே உள்ள நீண்டகால இடைவெளியைக் குறைத்தல் மற்றும் திறமையான மற்றும் மிகவும் திறமையான மனிதவளத்தைக் கொண்டு திறன் இடைவெளியை நிரப்புதல் நோக்கத்துடன் 04 கைத்தொழில் துறை சபைகள் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ச்சித்திட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன, 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் உரிய சபைகளின் செயற்பாட்டிற்காக ரூபா 140.9 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) பெறப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நிர்மாணம், உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை கைத்தொழில் துறை திறன் சபைகள் மற்றும் புதிதாக நிறுவப்பட்ட விவசாய கைத்தொழில் துறை திறன் சபைகள் 2022 ஆம் ஆண்டில் அந்த சபைகளை நிறுவுவதற்கான நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு எந்த வேலையையும் செய்திருக்கவில்லை. | பல்வேறு செயற்திட்ட முன்முயற்சிகளில் TVET துறைக்கு திறன் தேவைப்பாடுகள் பற்றிய தகவல்களை பரப்புவதில் பல தொழில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. மேலும், NCS/பாடத்திட்ட மேம்பாட்டில் தீவிர ஈடுபாடு ஏற்பட்டுள்ளது.<br><br>விவசாய சபை திட்டமிடல் மற்றும் ஸ்தாபன நிலையில் இருந்ததுடன் 2023 இல் இருந்து நடவடிக்கைகள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.<br>2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு தாமதமானமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் இறுதி மாதங்களில் கட்டுநிதி ம்டுப்படுத்தப்பட்ட அளவு கிடைத்தமை என்பன சபைகளின் செயற்பாட்டில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. உற்பத்தி மற்றும் நிர்மாணத்தின் இரண்டு | இவ்வாறான சபைகளை நிறுவுவதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முகாமையாளர்கள் பதவி விலகியதுடன் SSDP இற்கு அங்கீகரிக்கப்பட்ட பாதீடு கிடைக்காத காரணத்தால் புதிய பதவியணியினரை பணிக்கமர்த்துவது தாமதமானது, இது குறைந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. | |
| (ii) | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்துறை திறன்கள் சபை தொழிற்பயிற்சி துறையில் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களை பதிவு செய்வதற்காகவும் தொழிலதிபர்கள் சேவைகளைப் பெறுவதற்கும் ஒரு கைத்தொலைபேசி செயலியை உருவாக்கியதுடன் மீளாய்வாண்டில் மாத்திரமே தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு செயலமர்வுகளை நடாத்தியது. | தற்போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பெரிய வாடிக்கையாளர் குழுவில் சேவை வழங்குநர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியில் சபை ஈடுபட்டுள்ளது. NVQ சான்றிதழ் வைத்திருப்பவர்கள் பொது மக்களுக்கு சேவை செய்யும் போது APP மூலம் தங்கள் சேவைகளை சந்தைப்படுத்துவதற்கு பல நன்மைகள் உள்ளன. அதே நேரம் அது அவர்களின் சுய நிலைத்தன்மைக்கு உதவியாக இருக்கும் வருமானத்தை உருவாக்குவதற்கு சபையை அனுமதிக்கும். கைவினைஞர்கள் மட்டத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் தகவல்களைச் சேகரிப்பதும் உதவியாக இருக்கும், இது அடையாளம் காண்பதற்கு பயனுள்ள தரவுகளாக இருக்கும். | இவ்வாறான சபைகளை நிறுவுவதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | சுற்றுலாத் தொழில் துறை திறன் சபை மீளாய்வாண்டில் ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பாக பெண்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மாத்திரமே நடாத்தியிருந்தது. | பொருளாதார நெருக்கடியின் காரணமாக சுற்றுலாத்துறையின் நெருக்கடியான சூழ்நிலையிலும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு அமர்வைக் கொண்ட வீட்டில் தங்குதல் கருத்தை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தியமை தொழில்துறைக்கும் சபைக்கும் பயனளித்திருந்தது. | இவ்வாறான சபைகளை நிறுவுவதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | எனவே, இந்த சபைகள் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி முறைமையில் சரியாக சேர்க்கப்படாதமை,, சபைகள் அரசாங்க நிதியில் இயங்குகின்றமை மற்றும் சுயவருமானத்தை உருவாக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காதமை, சுய-வருமானத்தை உருவாக்குவதற்கு, நிரந்தர பதவியணியினர் மற்றும் நிர்வாகம் இல்லாதமை, சபைகளுக்கு சட்ட அந்தஸ்து இல்லாதமை, முறையான கண்காணிப்பு பொறிமுறையின்மை காரணமாக மேற்படி 04 சபைகளும் எதிர்பார்த்தவாறு செற்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | சபைகளின் கடந்தகால செயற்பாடுகள் குறித்து விரிவான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு, மேம்பாட்டிற்கான பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, பொருத்தமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது சபைகளை சிறந்த செயற்பாடுகளை நோக்கி அழைத்துச் செல்லும். சபைகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கும், சுய வருமானமீட்டுதல், தேவையானவாறு பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் தேவையான சட்டமூலங்களை வழங்குதல் ஆகியவற்றை அவற்றிற்கு அனுமதித்து அவற்றின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் ஒரு மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. துறை மூலோபாய அபிவிருத்தி ஆலோசகர்களால் ஆவணம் மதிப்பாய்வு செய்யப்பட்டு, செயலாளர்/ தலைமைத்துவத்தின் இறுதி ஒப்புதலுக்குப் பின்னர் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | இவ்வாறான சபைகளை நிறுவுவதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2018 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் NCS/பாடத்திட்டத்தை உருவாக்குவதற்கு நிகழ்ச்சித்திட்டம் ரூபா 30.27 மில்லியனை செலவிட்டிருந்தது. எனினும், புதிதாக உருவாக்கப்பட்ட 16 கற்கைநெறிகள் மற்றும் 11 திருத்தப்பட்ட கற்கைநெறிகளுக்கான மாணவர்களின் பங்கேற்பு மிகக் குறைந்த அளவில் இருந்தது. அதில் 08 கற்கைநெறிகளிற்கு 2022 வரை எந்த சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிட்ட NSC தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சந்தைக்கு ஏற்ற பாடத்திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 புறம்பான செலவினம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 இல் தொடங்கப்பட்டு 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் இரண்டு முறை 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டதுடன் உரிய காலத்தில் கடன் வழங்குவதில் தாமதம் காரணமாக கடன் வழங்கும் முகவர் ஐ.அ.டொலர் 3651 மேலதிக கடனிற்காக ஐ.அ.டொலர் 3,823 கடப்பாட்டுக் கட்டணங்களை அறவிட்டிருந்தது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் உடன்படிக்கை திகதியிலிருந்து 60 நாட்களுக்குப் பின்னர் பொருந்தக்கூடிய கடப்பாடு மாற்றங்கள் நடைமுறைக்கு வரும். அதன் பிரகாரம் கடன்வழங்கும் முகவர் கடப்பாட்டுக் கட்டணங்களை அறவிட முடியும். | தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்கு வினைத்திறனின்மைகளை க் குறைத்து, உரிய நேரத்தில் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிறைவேற்றல் முகவரின் உள்ளக கணக்காய்வு பிரிவால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள DLI இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நிகழ்ச்சித்திட்ட காலம் நீடிக்கப்பட்டதுடன் அதற்கேற்ப இந்த நடவடிக்கைகளுக்காகவும் ஏனைய தொடர் வேலைகளுக்காகவும் பாதீடுகள் ஒதுக்கப்பட்டன. நடவடிக்கைகளுக்கான வழிநடாத்தல் குழுவின் அங்கீகாரங்களைப் பெறுவதே ஒரு வழநடாத்தல் குழுக் கூட்டத்தின் நோக்கம் மற்றும் தேவையாகும். இந்தச் சூழலில், FLM செயற்பாட்டிற்குத் தேவையான வழிநடாத்தல் குழு அங்கீகாரங்கள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்ததால், அத்தகைய தேவைப்பாடு எதுவும் காணப்படவில்லை. | நி.பி. 133 இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவு மூலம் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |